# இலங்கை தேசிய ஆராய்ச்சி சபை

## விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சு

# வெற்றிடங்கள்

NRC SRI LANKA

இலங்கை தேசிய ஆராய்ச்சி சபையானது நிதி உதவித் திட்டங்கள் ஊடாக அரச துறை விஞ்ஞானிகள் மூலம் ஊக்குவிப்பு மற்றும் உதவி ஆய்வுகளுக்காக 2016 இன் 11 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட சட்டரீதியான அரச நிதி அளிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றாகும்.

தேசிய ஆராய்ச்சி சபையின் பின்வரும் பதவிகளுக்காக தகுதி பெற்ற இலங்கை பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## உதவிப் பணிப்பாளர் (விஞ்ஞான அலுவல்கள் ஒருங்கிணைப்பு) - பதவி 01

வேலை விபரம்: விஞ்ஞான மற்றும் மூலோபாய முகாமைத்துவத்திற்கு பொறுப்பாக இருந்து நிதியுதவித் திட்டங்கள், ஆராய்ச்சி நிகழ்ச்சிகள், நிர்வாகம், அறிக்கையிடல், பங்குதாரர் ஒருங்கிணைப்பு, கொள்கை அமுலாக்கம், கண்காணிப்பு நடவடிக்கைகள், தரவுத்தள முகாமைத்துவம், விதிமுறைப் பின்பற்றல், திட்டமிடல், நிறுவன அபிவிருத்தி மற்றும் நிறுவனத்தால் ஒப்படைக்கப்படும் ஏனைய கடமைகளை மேற்பார்வையிட்டு நிர்வகித்தல்.

**தகைமைகள்:**

**வெளிவாரி அபேட்சகர்கள்:**

1. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞானத் துறையில் இளமாணிப் பட்டம்.

மற்றும்

அரச நிறுவனம் அல்லது சபை அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனம் ஒன்றில் முதல் பட்டத்தைப் பெற்ற பின்னர் பதவிக்குரிய துறையில் குறைந்தது மூன்று (03) ஆண்டுகள் தகைமைக்கு பின்னரான அனுபவம்.

**உள்ளக அபேட்சகர்கள்:**

மேலுள்ள வெளிவாரி அபேட்சகர்களுக்கு தேவையான தகைமைகளை பெற்றிருத்தல்.

**வயது:** 22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

**மாதச் சம்பளம்:** MM 1-1– 2025 (அடிப்படைச் சம்பளம் + வாழ்க்கைச் செலவு) – ரூபா 81,710 + 17,800 = ரூபா 99,510

## விஞ்ஞான / ஆராய்ச்சி அதிகாரி பதவி 01

வேலை விபரம்: நிதியுதவித் திட்டங்களின் முகாமைத்துவத்திற்கு பொறுப்பாக இருந்து, நிதியுதவி தொடர்பான தகவல்களை வெளியிடுதல், தரவுத்தளங்களைப் பராமரித்தல், புள்ளிவிபரப் பகுப்பாய்வுகளை மேற்கொள்ளுதல், சபைக் கூட்டங்கள் மற்றும் தேவையான ஏனைய கூட்டங்களுக்கான அறிக்கைகளைத் தயாரித்தல், மேலும் கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள் போன்ற நிகழ்வுகளை ஒருங்கிணைத்தல்.

**தகைமைகள்:**

**வெளிவாரி அபேட்சகர்கள்:**

1. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞனம், மருத்துவம், பொறியியல், விவசாயம், பொருயியல், புள்ளிவிபரவியல், ICT கணினி விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம், கணினி பொறியியல் அல்லது வேறு ஏதேனும் தொடர்புடைய துறையில் சிறப்புப் பட்டம்

அல்லது

2. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞர்னம், மருத்துவம், பொறியியல், விவசாயம், பொருளியல், புள்ளிவிபரவியல், ICT கணினி விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம், கணினி பொறியயில் அல்லது வேறு ஏதேனும் தொடர்புடைய துறையில் பொதுவான பட்டம் அத்துடன் தொடர்புடைய துறையில் பட்டத்திற்கு பின்னரான டிப்ளோமா.

**வயது:** 22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

**மாதச் சம்பளம்:** AR 1– 2025 (அடிப்படைச் சம்பளம் + வாழ்க்கைச் செலவு) – ரூபா 81,675 + 17,800 = ரூபா 99,410

## முகாமைத்துவ உதவியாளர் பதவி 04

வேலை விபரம்: கடிதப் பரிமாற்றங்கள், கொடுப்பனவுகள், கணக்கியல் பதிவுகள், கொள்வனவு நடவடிக்கைகள், நிதியுதவி நிர்வாகம், திட்ட அறிக்கையிடல், தரவுத்தளப் பராமரிப்பு, பங்குதாரர்களுடனான தொடர்பாடல்கள் மற்றும் அலுவலக செயற்பாடுகள் ஆகியவற்றை நிர்வகிப்பதன் மூலம் நிர்வாக, நிதி மற்றும் செயலாளர் ஆதரவை வழங்குதல். இதன் மூலம் நிறுவனத்தின் திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் திறம்பட நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்தல். இப்பணிகள்/செயற்பாடுகள் தொழில்நுட்பம் அல்லாத தன்மையுடையவையாகும்.

**தகைமைகள்:**

**வெளிவாரி அபேட்சகர்கள்:**

1. க.பொ.த. (சா/த) பரீட்சையில் பின்வரும் நான்கு பாடங்களுக்காக திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்:
   - I. சிங்களம்/ தமிழ்
   - II. ஆங்கில மொழி (பதவிக்கு தேவையெனில்)
   - III. கணிதம்

மற்றும்

2. க.பொ.த. (உ/த) பரீட்சையில் (பொதுப் பரீட்சை தவிர) மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றவைகள்: கணினி பயன்பாடுகள், சிங்களம், தமிழ் அல்லது ஆங்கில தட்டச்சில் தேர்ச்சி மற்றும் பதவிக்கு பிரத்தியேகமான தகைமைகள் மேலதிக அனுகூலங்களாகும்.

**உள்ளக அபேட்சகர்கள்:**

பின்வரும் தகைமைகளைப் பெற்றிருக்கும் ஆரம்ப நிலை – தேர்ச்சி, ஆரம்ப நிலை – பகுதி தேர்ச்சி மற்றும் ஆரம்ப நிலை – தேர்ச்சி அல்லாத ஊழியர்கள் விண்ணப்பிக்க தகுதி பெறுவர்.

1. க.பொ.த. (சா/த) பரீட்சையில் பின்வரும் நான்கு பாடங்களுக்காக திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்:
   - I. சிங்களம்/ தமிழ்
   - II. ஆங்கில மொழி (பதவிக்கு தேவையெனில்)
   - III. கணிதம்

**மற்றும்**

2. மேலுள்ள பணியாளர் பிரிவின் கீழ் நிரந்தர பதவி ஒன்றில் குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்

   மற்றவைகள்: கணினி பயன்பாடுகள், சிங்களம், தமிழ் அல்லது ஆங்கில தட்டச்சில் தேர்ச்சி மற்றும் பதவிக்கு பிரத்தியேகமான தகைமைகள் மேலதிக அனுகூலங்களாகும்.

**வயது:** 18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

**மாதச் சம்பளம்:** MA 1–1 2025 (அடிப்படைச் சம்பளம் + வாழ்க்கைச் செலவு) – ரூபா 43,312 + 17,800 = ரூபா 61,112

## ஓட்டுநர் - பதவி 02

வேலை விபரம்: நிறுவன வாகனங்களை நடைமுறையிலுள்ள விதிமுறைகளுக்கு இணங்க இயக்கி பராமரித்தல் பயணிகள், பொருட்கள், ஆவணங்கள் மற்றும் பொதிகள் ஆகியவற்றின் பாதுகாப்பான மற்றும் திறமையான போக்குவரத்தை உறுதிப்படுத்துதல். வாகனப் பதிவுகளைப் பராமரித்தல், வாகனங்களின் நிலையை கண்காணித்தல், ஓட்டுநர் அனுமதிப்பத்திரங்கள் மற்றும் காப்புறுதிகளை புதுப்பித்தல், மேலும் வாகனங்களின் பாதுகாப்பு மற்றும் வீதியில் இயக்கத் தகுதியை உறுதிப்படுத்துதல்.

**தகைமைகள்:**

**வெளிவாரி அபேட்சகர்கள்:**

1. க.பொ.த. (சா/த) பரீட்சையில் அதிகபட்சம் இரண்டு அமர்வுகளில் குறைந்தது இரு (02) திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும்

கனரக வாகனங்களை செலுத்துவதற்காக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட ஓட்டுநர் அனுமதிப் பத்திரத்தை பெற்றிருத்தல் மற்றும் ஓட்டுநர் அனுமதிப்பத்திரத்தைப் பெற்ற பின்னர் குறைந்தது மூன்று (03) ஆண்டுகள் வாகனம் ஓட்டுவதில் அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

**உள்ளக அபேட்சகர்கள்:**

1. கனரக வாகனங்களை செலுத்துவதற்காக மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட ஓட்டுநர் அனுமதிப் பத்திரத்தை பெற்றிருத்தல் மற்றும் ஓட்டுநர் அனுமதிப்பத்திரத்தைப் பெற்ற பின்னர் குறைந்தது மூன்று (03) ஆண்டுகள் வாகனம் ஓட்டுவதில் அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

**மற்றும்**

NRC இல் குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**வயது**: 18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

**மாதச் சம்பளம்:** PL 3 - 2025 (அடிப்படைச் சம்பளம் + வாழ்க்கைச் செலவு) – ரூபா 40,834 + 17,800 = ரூபா 58,638

**மேலுள்ள அனைத்து பதவிகளுக்கும் பொருந்துகின்ற ஏனைய நிபந்தனைகள்**

1. விண்ணப்பதாரர்கள் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பதாரர்கள் பதவியின் பணிகளை மேற்கொள்வதற்கு உடல் மற்றும் உளத் தகைமையை பெற்றிருத்தல் வேண்டும் என்பதோடு நாட்டின் எந்த ஒரு பகுதியிலும் பணியாற்ற வேண்டும்.
3. விண்ணப்பதாரர்கள் சிறந்த பண்புடையவர்களாக இருத்தல் வேண்டும்.
4. எழுத்து மூலமான போட்டிப் பரீட்சை மற்றும்/ அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை ஒன்றின் மூலம் ஆட்சேர்ப்பு இடம்பெறும்.
5. ஓர் (02) ஆண்டு காலம் அல்லது மறுசீரமைப்பு செயல்முறை பூர்த்தியாகும் வரை ஆகிய முதலில் நிகழும் காலம் வரை தேசிய ஆராய்ச்சி சபையின் அங்கீகரிக்கப்பட்ட பணிக்குழுவில் உள்ள வெற்றிடங்களுக்காக ஒப்பந்த அடிப்படையில் இந்த நியமனம் அமையும். ஊழியர் சேமலாப நிதியம் (EPF) மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்காக (ETF) உரித்துடையது.
6. விண்ணப்பதாரர்கள் தமது பிறப்புச் சான்றிதழ் பிரதிகள், ஏனைய தொடர்புடைய சான்றிதழ்கள், இரு உறவினர்கள் அல்லாத நடுவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகளுடன் சேர்த்து தமது கையொப்பமிடப்பட்ட விண்ணப்பங்களை, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு 2026 ஜுலை 15ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் "தலைவர், தேசிய ஆராய்ச்சி சபை, 120/7, வித்தியா மாவத்தை, கொழும்பு-07" என்ற முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால்/ விரைதூதரில் அனுப்புதல் வேண்டும்.
7. அரச திணைக்களங்கள் / கூட்டுத்தாபனங்கள் / சட்டரீதியான சபைகளைச் சேர்ந்த அதிகாரிகளின் விண்ணப்பங்கள் தமது குறித்த நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்.
8. மேலுள்ள தேவைகளை பூர்த்தி செய்யாத அனைத்து விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

இந்த விளம்பரம் www.nrc.gov.lk என்ற தேசிய ஆராய்ச்சி சபை இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

**தலைவர்**
**தேசிய ஆராய்ச்சி சபை**
**120/7, வித்தியா மாவத்தை**
**கொழும்பு-7**
**இணையதளம்:** www.nrc.gov.lk
**தொ. பே.: 011-2675176**